சுருக்கம்

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – கல்வி – விடுதிகள் – 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் வழங்க நிருவாக ஒப்புதல் வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை

அரசாணை (நிலை) எண்.73

நாள் 24.11.2021
பிலவ, கார்த்திகை 8
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டவை:

1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண். பி2/ 5638/2021, நாள் 21.09.2021 மற்றும் 18.10.2021.
2. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.பி4/ 3020/2021, நாள் 23.09.2021 மற்றும் 18.10.2021.

******

ஆணை:

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆகியோரால், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டுக் கருவிகள் 1 கோடியே 50 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும் என அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

2. மேற்காணும் அறிவிப்புகளை செயல்படுத்தும் பொருட்டு மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோரின் கடிதங்களில், மாணவ, மாணவியரின் உடல் நலன் மற்றும் மனநலனை மேம்படுத்துவதற்கு உடற்பயிற்சி அவசியமாகிறது எனவும், தற்போதைய சூழ்நிலையில் காவல்துறை, இராணுவம் மற்றும் இரயில்வே ஆகிய துறைகளில் உள்ள வேலைவாய்ப்பினை

நாடும்போது உடற்தகுதிக்கென த்னி மதிப்பெண்கள் வழங்கப்படுவதால் அவர்களின் உடலினை உடற்பயிற்சி செய்து வலிமைப்படுத்துவது அவசியமாகிறது எனவும் தெரிவித்துள்ளனர்.

3. எனவே, முதற்கட்டமாக 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதி மாணவ/மாணவியருக்கு இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கருவிகளுள் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றை வழங்கலாம் எனவும், அக்கருவிகளை பரிந்துரைப்பதற்காக கீழ்க்கண்டவாறு குழு அமைக்கலாம் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

1. துணை இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன்
2. துணை இயக்குநர், சிறுபான்மையினர் நலன்
3. கணக்கு அலுவலர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்
4. நேர்முக உதவியாளர், பிற்படுத்தப்பட்டோர் நலன்
5. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஒருவர்
6. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அலுவலர் ஒருவர்
7. உடற்கல்வி ஆசிரியர் (ஒருவர்) கள்ளர் சீரமைப்பு பள்ளி

4. இக்குழு தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி அக்கருவிகளை கொள்முதல் செய்ய வரைவு ஒப்பந்தப்புள்ளி தயார் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் எனவும், அவ்வாறு கொள்முதல் செய்யப்படும் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கருவிகள் குறித்த விவரங்களை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோரிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், இக்குழுவினை நிர்வாக நலன் கருதி மாற்றி அமைக்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. எனவே, ஒரு மாணவர் விடுதிக்கு ரூ.70,000/- வீதம், (உடற்பயிற்சி கருவிகள் ரூ.50,000/- + விளையாட்டு கருவிகள் ரூ.20,000/-) ஒரு மாணவியர் விடுதிக்கு ரூ.40,000/- வீதம் (உடற்பயிற்சி கருவிகள் ரூ.20,000/- + விளையாட்டு கருவிகள் ரூ.20,000/-) 273 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு கருவிகளை வழங்குவதற்கு தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.1,50,30,000/-க்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

6. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு,

i. இணைப்பில் உள்ள உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு கருவிகளுள் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்து பரிந்துரைப்பதற்கு மேலே பத்தி 3–ல் உள்ளவாறு மாநில அளவிலான குழு அமைக்கவும்,

ii. இக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் கருவிகளை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி வரைவு ஒப்பந்தப்புள்ளி தயார் செய்து கொள்முதல் பணிகளை மேற்கொள்ள அனுமதியும்,

iii. குழுவின் நிர்வாக நலன் கருதி அதனை மாற்றி அமைக்க பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுமதியும்,

iv. வெளிப்புற இடவசதிக்கான சாத்தியக்கூறு இல்லாத 55 விடுதிகளுக்கு ஏற்றது போல் உள்ளரங்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு கருவிகளை கூடுதலாக தேர்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட தொகைக்குள் வழங்குவதற்கு அனுமதியும், மற்றும்

v. கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ள 2 விடுதிகளையும் சேர்த்து 275 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலக் கல்லூரி விடுதிகளில் இத்திட்டத்தினை செயல்படுத்த தேவைப்படும் மொத்த செலவினமான ரூ.1,51,70,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே ஐம்பத்து ஒன்று இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) நிருவாக ஒப்புதலும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.52277/ நிதி (பி, மிபி(ம)சிந)/2021, நாள் 24.11.2021–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை– 5.
சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை – 5.
இணை இயக்குநர் (கள்ளர் சீரமைப்பு), மதுரை.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).

மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூல அலுவலர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

**நகல்**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி, மிபி (ம)சிந)/வ.செ.பொது I/வ.செ.பொது II/வ.வ.I)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந3)த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/11/2021

பிரிவு அலுவலர்

24/11/2021

அரசாணை (நிலை) எண்.73, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை, நாள் 24.11.2021–ன் இணைப்பு.

**உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கருவிகள் விவரம்**

**I. மாணவர்களுக்கான உடற்பயிற்சி கருவிகள்**

| S. No. | EQUIPMENTS |
|---|---|
| 1 | Dumbells (10Kgs) |
| 2 | Push up Bar |
| 3 | Double Bar |
| 4 | Karla Kattai |
| 5 | Skipping Rope |
| 6 | Weight Lift Rods<br>i. Dumbell Rods<br>ii. Biceps Rods<br>iii. Shoulder Rods<br>iv. W-Rods |
| 7 | Weight Lift Plates (50Kgs) |
| 8 | Bench Press Seat with Leg Extension |

**II. மாணவியருக்கான உடற்பயிற்சி கருவிகள்**

| S. No | EQUIPMENTS |
|---|---|
| 1 | Dumbells (20Kgs) |
| 2 | Skipping Rope |
| 3 | Stretching Rope (Resistance tube) tuning gym equipment |

**III. மாணவ / மாணவியருக்கான விளையாட்டுக் கருவிகள்**

| S. No. | EQUIPMENTS |
|---|---|
| 1 | Carrom Board |
| 2 | Chess Board |
| 3 | shuttle bat |
| 4 | Shuttle cork |
| 5 | Volley Ball |
| 6 | Volley Ball Net |

**IV. கூடுதல் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கருவிகள் அடங்கிய பட்டியல்**

1. Tenni koit Ring
2. Moveable Post
3. Net
4. Basket Ball
5. Instant Ring for Basket Ball
6. Cricket Bat
7. Tennis Ball
8. Stump Set

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்